## தொழில் நுட்பக் கல்வி இயக்ககம்,    சென்னை – 25

### அங்கீகரிக்கப்பட்ட வணிகவியல் பயிலகங்கள் கவனத்திற்கு

*****************

தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தில் வாரியத் தேர்வுகளின் கீழ் தட்டச்சு, சுருக்கெழுத்து மற்றும் கணக்கியல் தேர்வுகள் வருடத்தில் இரண்டு முறை, **February** மற்றும் **August** மாதங்களில் நடத்தப்பட்டு வருகிறது. வரும் **February-2016** தேர்வுகளுக்கான விண்ணப்பங்கள் தற்சமயம் பெறப்பட்டு வருகின்றன.

பிப்ரவரி **2016** ல் நடைபெறவுள்ள வணிகவியல் தேர்விலிருந்து முதுநிலை தட்டெழுத்து தேர்வுகள் (தமிழ், ஆங்கிலம்) நான்கு அணிகளாக நடத்த தேர்வு வாரியத்தால் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

எனவே இனிவரும் தேர்வுகளில் சனிக்கிழமை அன்று இளநிலை நான்கு அணிகள் மற்றும் முதுநிலை ஒரு அணியாகவும் , ஞாயிறு அன்று இளநிலை ஒரு அணி மற்றும் முதுநிலை மூன்று அணியாகவும் நடத்தப்படும். உயர்வேகம் தட்டெழுத்து **(High Speed)** தேர்வுகள் வழக்கம்போல் ஞாயிறு அன்றே நடைபெறும். இவ்விபரத்தினை அனைத்து அங்கீகரிக்கப்பட்ட வணிகவியல் பயிலகங்களும் நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

அங்கீகரிக்கப்பட்ட வணிகவியல் பயிலகங்கள் தங்கள் வருடாந்திர பகுத்தாய்வு படிவத்தை வரும் டிசம்பர் 1ம் தேதிக்குள் உரிய கட்டணத்தை வரைவோலையாக இணைத்து தேர்வு வாரியத்திற்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது. டிசம்பர் 1ம் தேதிக்கு பின்னர் வரும் பகுத்தாய்வு படிவங்களை ஏற்றுக்கொள்ள இயலாது எனவும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

அங்கீகரிக்கப்பட்ட வணிகவியல் பயிலகங்கள் இவ்விவரங்களை அறிந்து பயன்படுத்திக்கொள்ளுமாறு தெரிவித்துக்கொள்ளப்படுகின்றது.

தொலைபேசி எண்:- **044 – 22351018**    **Extn. 356, 358**

கூடுதல் இயக்குநர் (தேர்வு) (பொ)

தேர்வு வாரியம்